DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.22/2022**

**2025-ம் ஆண்டு மே திங்கள் 08- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | மொபைல் ஷாப் |
| பெயர் | - | முகமது ஹபிக் ரகுமான் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | முகமது ரபிக் | சமயம் | - | |
| கிராமம் | - | சிறுவர் பூங்கா, வால்பாறை | வயது | - | 30/2025 |
| சாதி | - | | | | |

**08-05-2025**

**(எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார்.எதிரி காணொளி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வால்பாறை புதுமார்க்கெட்டில் மொபைல் கடை போட்டுள்ளேன். அ.சா.1 அகமது சாதிக் என்பவரை தெரியும். அவர் எனதுகடைக்கு மேல் லயனில் மொபைல் கடை வைத்திருந்தார். எதிரி முகமது நியாஸ் என்பவரின் பெயர் தெரியாது. அவரை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். கடந்த 23-02-2022-ம் தேதி இரவு 07.15 மணியளவில் நான் எனது கடையில் வேலை பார்த்துக்கொண்டிருக்கும் போது மேல் லயனில் அ.சா.1 னின் கடையில் சண்டை என்று எனக்கு தகவல் கிடைத்தது. நான் அ.சா.1 னின் கடைக்குசென்றபோது அ.சா.1 னின் மூக்கில் ரத்தம் வலிந்துகொண்டிருந்தது. நான் அவரை எனது இரு சக்கர வாகனத்தில் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்துவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். சம்பவம் பற்றி போலீசார் என்னை விசாரித்தார்கள். (சாட்சி எதிரியை காணொளி காட்சி மூலம் பார்த்து அங்கிருப்பவர்தான் சம்பவதினத்தன்று சம்பவயிடத்திற்கு நான் சென்றுகாயம்பட்ட அ.சா.1 னை மருத்துவமனைக்கு அழைத்துசெல்லும்போது அங்கிருந்தார் என்று சாட்சியமளிக்கிறார்).

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் அகமது சாதிக் என்பவரை எனக்கு எவ்வளவு நாளாக தெரியும் என்றால் கடந்த 4, 5 வருடங்களாக தெரியும். எதிரி நியாஸ் என்பவரை எனக்கு எவ்வளவுநாளாக தெரியும் என்றால் அவரை தெரியாது சம்பவதினத்தன்று சம்பவயிடமான கடைக்கு முன்னாள் நின்றிருந்தார். அன்றைய தினம் மட்டும் தான் நான் பார்த்திருக்கிறேன். அ.சா.1 எனக்கு போன் செய்து தகவல் சொன்னாரா என்றால் இல்லை சம்பவத்தை கேள்விப்பட்டு நான் போனேன் என்றால் சரிதான். அ.சா.1 க்கும் தஸ்னிம் என்ற பெண்ணுக்கும் பழக்கம் உள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் தெரியாது. தஸ்னிம் என்பவரின் அம்மா ஷீராபீபி என்பவரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு நான் செல்லும் போது தஸ்னிம் அந்த இடத்தில் இருந்தார் என்றால் இல்லை நான் பார்க்கவில்லை. அ.சா.1 க்கு ஹீமோபீலியா என்ற நோய் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவருக்கு சாதமாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு

என்ன பிரச்சனை என்று தெரியாது. காயம்பட்டிருந்த அ.சா.1 னை நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றததின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். நான் சம்பவயிடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றாலும் அ.சா.1 எனது நண்பர் என்பதால் நான் சம்பவயிடத்தில் எதிரியை பார்த்தாக தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது அங்கு நிறைய பேர்கள் நின்றிருந்தார்கள். அவர்களில் எதிரியும் நின்றிருந்தார். எதிரி அ.சா.1 னை அடித்ததை நான் பார்க்கவில்லை. தற்போது நீதிமன்றத்தில் முதல் விசாரணையிலும் குறுக்கு விசாரணையிலும் சொல்லியுள்ள விசயங்களைதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.